


திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி 74 வது வார்டில் உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு மேயர் பிரியாராஜன் தலைமையில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு பொதுமக்களுக்கு பட்டாசு, இனிப்பு மற்றும் பரிசுத்தொகை வழங்கினார். இந்நிகழ்வில் பகுதிகழகச் செயலாளர் செ. தமிழ்வேந்தன், மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், புனிதவதி எத்திராஜன், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், எஸ் தமிழ்ச்செல்வி, பெரம்பூர் ஆர்.ராஜன் எஸ் புஷ்பராஜ் ,ஜி . கிருஷ்ணகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஆணவப் படுகொலைத் தடுக்க ஆணையம்: முதல்வர் அறிவிப்பு!

# உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்பதை விட்டொழித்து மனிதகுலம் வாழ வழி காண்போம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, அக்.19-

ஆணவப் படுகொலைகளைத் தடுக்க ஆணையம் அமைக்க முதல்வர் அறிவித்துள்ளார். உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்பதை விடடொழித்து மனிதகுலம் வாழ வழி காண்போம் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து 18.10.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-



தினகரன்

அக்டோபர் 18, 2025 சனிக்கிழமை

அடியோடு ஒழிப்போம்

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டமன்றத்தில் நேற்று ஒரு அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ஆணவ படுகொலைகளை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து, அரசுக்கு உரிய பரிந்துரைகளை வழங்குவதற்காக, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

இந்த ஆணையத்தில், சட்ட வல்லுநர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் மற்றும் மாற்றுவியல் அறிஞர்கள் இடம் பெறுவார்கள். இந்த ஆணையம் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கருத்துகளை பெற்று, ஆணவ படுகொலைகளை தடுக்க தேவையான, உறுதியான பரிந்துரைகளை தமிழக அரசுக்கு வழங்கும். ஆணையத்தின் பரிந்துரைக

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டமன்றத்தில் நேற்று ஒரு அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ஆணவ படுகொலைகளை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து, அரசுக்கு உரிய பரிந்துரைகளை வழங்குவதற்காக, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.என். பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார். இந்த ஆணையத்தில், சட்ட வல்லுநர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் மற்றும் மாற்றுவியல் அறிஞர்கள் இடம் பெறுவார்கள்.

இந்த ஆணையம் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கருத்துகளை பெற்று, ஆணவ படுகொலைகளை தடுக்க தேவையான, உறுதியான பரிந்துரைகளை தமிழக அரசுக்கு வழங்கும். ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இந்த சமூகக் கொடுமையை தடுப்பதற்கென தமிழக அரசு உறுதியான புதிய சட்டங்களை இயற்றும் என்றும் முதலமைச்சர் தெளிவுபட பேசியுள்ளார்.

ஆணவ படுகொலையின் அடிப்படை நோக்கம், “கவுரவத்தை” நிலைநிறுத்துவது அல்லது குடும்பத்தின் “பெயருக்கு களங்கம்” ஏற்படாமல் தடுப்பது ஆகும். சாதி அல்லது சமூக பின்னணியில் வேறுபாடுகள் உள்ள ஒருவரை காதலித்து திருமணம் செய்வது ஆணவ படுகொலைக்கு ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. தங்கள் சாதிக்கு வெளியே ஒருவரை திருமணம் செய்யும்போது, அது குடும்பத்துக்கு அவமானம் என்று கருதப்பட்டு, கொலைக்கு வழி வகுக்கிறது.

விவாகரத்து செய்து கொள்வதோ அல்லது திருமண உறவுக்கு புறம்பாக செயல்படுவதோ குடும்பத்தின் கவுரவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என எண்ணி கொலை செய்யப்படுகிறார்கள். குடும்பத்தின் கட்டுப்பாடுகளையோ அல்லது பாரம்பரிய கட்டுப்பாடுகளையோ மீறி நடப்பதாகவும், அதனால் கொலை செய்யப்படுவதாகவும் கருதப்படுகிறது. பொதுவாக பெண்களே இத்தகைய கொலைகளுக்கு இலக்காகின்றனர்.

வளர்ந்துவிட்ட சமுதாயத்தில் இப்படி ஒரு கொலை நடப்பது மனிதகுலத்துக்கு பெரும் தலைகுனிவை ஏற்படுத்துகிறது. எல்லா துறையிலும் முன்னேறி வருகிறோம் என மார்தட்டுகிற நாம், கவுரவம் என்ற ஒற்றை சொல்லுக்காக இன்னொரு மனித உயிரை பறிப்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை. இது, எவ்வளவு கீழ்த்தரமான செயல் என்பதை எண்ணி பார்ப்பதும் இல்லை. இந்த அவலத்தை சமுதாயத்தில் இருந்து அடியோடு நீக்க வேண்டும். வேரும், வேரடி மண்ணோடும் துடைத்தெறிய வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த ஆணையத்தை அமைத்துள்ளார். இந்த ஆணையம் பரிந்துரைக்கும் அம்சங்கள் அனைத்தும் சட்ட முன்வடிவமாக மாறும். அதன்பிறகு, சட்டத்தின்பிடி இறுகும். ஆணவ படுகொலைகள் அடியோடு தடுக்கப்படும் என்பதே நிதர்சனம். சட்டம் கடுமையாக்கப்பட்டால் தான் குற்றங்கள் குறையும் என்பதை மேற்கத்திய நாடுகள் சில இன்னமும் தங்களது முக்கிய கொள்கையாக பின்பற்றுகின்றன. அந்த நிலையை நாமும் உருவாக்கித்தான் ஆக வேண்டும். இதை செய்தால்தான் ஆணவ படுகொலைகளை தடுக்கமுடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காகத்தான் இந்த ஆணையம்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியபடி, உலகம் அறிவு மயமாகிறது, ஆனால் அன்பு மயமாவது தடுக்கப்படுகிறது. எல்லோரிடத்திலும் அன்பு காட்டுவோம், இழிச்சொல் தவிர்ப்போம். வீண் வறட்டு கவுரவம் தடுப்போம். நம் உயிரைப் போல், எல்லா உயிர்களையும் நேசிப்போம். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பதை விட்டொழித்து, மனிதகுலம் வாழ வழிகாண்போம். ஆணவ படுகொலையை அடியோடு ஒழிப்போம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சித்த மருத்துவ, தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கம் உட்பட

# 18 சட்ட மசோதாக்கள் பேரவையில் நிறைவேற்றம்!

சென்னை, அக்.19-

சட்டப்பேரவை கூட்டத்தின் நிறைவு நாளான நேற்று, தனி யார் மற்றும் சித்த மருத்துவ பல்கலைக் கழகங்கள் உருவாக் கும் சட்டம் உட்பட 18 சட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. சட்டப்பேரவையில் ஊரக உள்ளாட்சிகளில் கழிவு நீக்க செயல்பாடுகளுக்கு உரிமம் வழங்கும் வகையில் ஊராட்சிகள் சட்டத் திருத்த முன்வடிவை அமைச்சர் ஐ.பெரியசாமி நேற்று அறிமுகம் செய்தார். நெடுஞ்சாலை, கடல் சரக்கு போக்குவரத்தில் குற்றங்கள் குறித்து, நீதி மன்ற வழக்கு கள் வரும் போது, சிறைதண் டனை, அபராதம் விதிப்பதை தவிர்த்து பணம் சார்ந்த உரிமை யியல் தண்டத் தொகை விதிப் பதை செயல்படுத்தும் வகையில், நெடுஞ்சாலைத் துறை, கடல்சார் வாரிய சட்டங்களில் திருத்த முன் வடிவுகளை அமைச்சர் எ.வ. வேலு அறிமுகம் செய்தார்.

மின்துறை, தொழிற் கல்வி நிலையங்கள், தனி யார் கல் லூரிகளில் பணம் சார்ந்த தண் டத்தொகை விதிப்பதை செயல் படுத்தும் சட்ட முன்வடிவுகளை அமைச்சர்கள் சிவசங்கர் மற்றும் கோவி.செழியன் ஆகியோர் அறிமுகம் செய்தனர்.

அதேபோல், சமய நிறுவனங்கள் கல்வி நிறுவனங்களை நிறு வுதல், பராமரித்தல், அர்ச்சகர் கள், இசைக்கலைஞர்கள், ஓதுவார்கள், அத்யாபகர்கள், வேதபாராயணம் செய்பவர்களுக்கான பயிற்சிப் பள்ளிகளை நிறுவ இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான மசோ தாவை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிமு கம் செய் தார். இதைத் தொடர்ந்து, நிதி யொதுக்கச் சட்டமுன்வடிவை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிமுகம் செய்தார்.

இவற்றைத் தொடர்ந்து, இந்த சட்ட முன்வடிவுகள், ஆய்வு செய்யப்பட்டு நிறை வேற்றப்பட்டன. இவைதவிரகடந்தாண்டு பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்டு, ஆளுநரால் திருப்பியனுபப்பட்ட நிதிநிலை நிர்வாக பொறுப்புடைமை திருத்தச்சட்ட முன்வடிவு மீண்டும் நிறைவேற்றப்பட்டது. மேலும், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்கள் ஓய்வூதி யம் உயர்வு, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழுவில் மாற்றுத்திற னாளிகளை நியமித்தல், வழக் கிழந்த சட்டங்களை நீக்கும் நீக்கறவு சட்ட முன்வடிவுகள்,ஊராட்சிகளின் தனி அலுவலர் கள் பதவிக்காலத்தை மேலும் 6 மாதத்துக்கு நீடித்தல், ஊரகஉள்ளாட்சிகளில் கழிவுநீக்க செயல்பாடுகளுக்கு உரிமம் வழங்குதல் ஆகிய சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இதுதவிர, ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்ட முன் வடிவு, சித்த மருத்துவப் பல் கலைக்கழகம் உருவாக்குதல், தனியார் பல்கலைக்கழகங்கள்

உருவாக்குதல், பல்கலைக் கழகங்களில் ஆசிரியரல்லா பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வா ணையம் மூலம் நிரப்புவதற் கான சட்ட முன் வடிவுகள் என 18 சட்ட முன்வடிவுகள் நேற்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன.



சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி, மேற்கு பகுதி 110வது, வார்டில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, நலத்திட்ட உதவிகள் வழங்கி அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது வட்ட செயலாளர்கள் த.குணசேகரன், கே. எஸ். தினேஷ்பிரபு, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர். விஜய், ச.அசோக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி



## தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித் தொகை மற்றும் பொற்கிழியாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 20 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.5,00,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து, இந்த நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

ஆகஸ்ட் மாதத்துக்கான நிதி உதவிகளைப் பெறும் 20 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | க.வித்யா, க/பெ கந்தசாமி, 1/316, விஜயலட்சுமி அடுக்ககம், 3–வது பிளாக், குரோம்பேட்டை சாலை, நன்மங்கலம், சென்னை – 600 117. |
| 2. | கோ.கீர்த்திகா, த/பெ கோட்டைச்சாமி, வடக்குத் தெரு, எரணம்பட்டி, தம்மிநாயக்கன்பட்டி, தேவாரம், தேனி – 625 530. |
| 3. | ஜெ.ஸ்ரீநிதி, த/பெ ஜெய்சங்கர், 6/1, கடும்பாடி நாகம்மன் கோயில் தெரு, சத்திரம், பட்டாபிராம், சென்னை – 600 072. |
| 4. | பீ.சாதிக்பாட்ஷா, த/பெ பீர் பாஷா, 70–ஹெச், அண்ணா நகர், ஆனைமலை, கோயம்புத்தூர் – 642 104. |
| 5. | அ.மலையப்பன், த/பெ அய்யாசாமி, 1/135, அக்கா சாவடி நல்லிச்சேரி, பசுபதிகோயில், தஞ்சாவூர் – 614 206. |
| 6. | வீ.இளையராஜா, த/பெ வீராசாமி, 1/172, பாக்கம், எண்கண், குடவாசல், திருவாரூர் – 612 603. |
| 7. | சீ.கிருத்திகா, த/பெ சீனிவாசன், 11/02, கெனால் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. |
| 8. | பி.சி.யோகேஷ், த/பெ சந்திரசேகர், 16/1, கோதண்டராமணி தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021. |
| 9. | ரா.வசந்தகுமார், த/பெ ராதாகிருஷ்ணன், 58/3, மேகலிங்கபுரம், சிந்துபூந்துறை, ஜங்ஷன், திருநெல்வேலி – 627 001. |
| 10. | சு.பிரேமலதா, த/பெ சுதாகர், 21/27, ஜங்ஷன் ரோடு, பாலக்கரை, விருதாச்சலம், கடலூர் – 606 001. |
| 11. | சா.சுப்பிரமணியன், த/பெ சாம்பசிவம், இராஜாளிக்காடு, வேதாரண்யம், நாகப்பட்டினம் – 614 810. |
| 12. | லோ.யுவராஜ், த/பெ லோகநாதன், 55, கருந்தேவன்பாளையம், நஞ்சை ஊத்துக்குளி, ஈரோடு – 638 104. |
| 13. | மு.முத்துராஜ், த/பெ முனுசாமி, 22/17, பட்டத்தரசி அம்மன் கோயில் வீதி, சிங்காநல்லூர், கோயம்புத்தூர் – 641 005. |
| 14. | த.பாண்டியன், த/பெ தங்கவேல், 2/104, மேலூர், செவல்பட்டி, மருங்காபுரி, திருச்சிராப்பள்ளி – 621 314. |
| 15. | ர.கல்யாணி, த/பெ ரத்தினம், 26, கீழ்தளம், இராமலிங்கேஸ்வரர் கோயில் தெரு, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. |
| 16. | ம.தீபா, க/பெ மணி, 185, வெடியங்காடு, இரா.கி.பேட்டை, திருத்தணி, திருவள்ளூர் – 631 302. |
| 17. | கா.நைனா முகமது, த/பெ காதர் ராவுத்தர், 4122–ஏ, மேல அனுப்பானடி வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, மதுரை – 625 009. |
| 18. | மா.பழனிச்சாமி, த/பெ மாறன், 47, 3–வது வீதி, செங்கோட்டையன் நகர், நாதிபாளையம், கோபிச்செட்டிப்பாளையம், ஈரோடு – 638 476. |
| 19. | அ.சல்மா பர்வின், க/பெ அயூப்கான், 33, ஹெச்.ஐ.ஜி.பி., டி.என்.ஹெச்.பி. குடியிருப்பு, முல்லை நகர், மேற்கு தாம்பரம், செங்கல்பட்டு – 600 045. |
| 20. | த.ஆத்தியப்பன், த/பெ தங்கவேல், 12, 5–வது தெரு, எழில் நகர், சென்னை – 600 118. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18.10.2025

கலைஞர் 100
1924 - 2023


# எழும்பூர் தொகுதி 99வது வார்டில் மழை முன்னெச்சரிக்கைப் பணிகள்!

## மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி ஆய்வு செய்தார்!

சென்னை, அக். 19 -

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தின்படி, அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு ஆலோசனைப்படி, எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டில் தென் மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு நடைபெறும் பணிகளை மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி ஆய்வு மேற்கொண்டார்.

வார்டுக்குட்பட்ட சண்முகராயன் தெரு, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சாஸ்திரி நகர், புதிய பூபதி நகர், ஆகிய பகுதிகளில் பொருத்தப்பட்ட 100 எச்.பி மோட்டார்கள் மற்றும் புரசைவாக்கம் ராஜா அண்ணாமலை சாலையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகளை பார்வையிட்டார்.

மேலும் புரசைவாக்கம் சுந்தரம் பிள்ளை தெரு, கீழ்பாக்கம் புல்லாபுரம், சாஸ்திரி நகர் ஆகிய பகுதிகளில் உள்ள பம்பிங் ஸ்டேஷன், ஈ.வி.ஆர் பெரியார் சாலையில் நடைபெற்று வரும் பைப்லைன் கிராசிங், ஆகிய பணிகளை கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி மாநகராட்சி அதிகாரிகளுடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்,

அதுபோது வார்டு கோட்ட பொறியாளர் கே.சிவகுமார், துப்புரவு மேற்பார்வையாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, துப்புரவு ஆய்வாளர் திரு.டி.தினகரன், மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் பங்கேற்றனர்.